# பாதுகாப்பான அனைவரையும் ஏற்கும் பாடசாலைகளை உருவாக்குதல்: அனைவரையும் ஏற்கும் சட்டம் (பில்/மசோதா 13) பற்றிய பெற்றோருக்கான தகவல்

பாதுகாப்பான அனைவரையும் உள்வாங்கி ஏற்கும் பாடசாலை ஒரு மாணவர் தழைத்தோங்கவும் அவரது நலனுக்கும் முக்கியம் என நாம் அறிவோம்.

அதனால்தான் பில் 13 எனும் *அனைவரையும் ஏற்கும் பாடசாலை சட்டத்தை* அரசு அறிமுகப்படுத்தியது; இது இப்போது சட்டமாக்கப்பட்டுள்ளது.

### பில் 13 என்றால் என்ன?

பில் 13 ஆனது பாடசாலை மாணவர்கள் மத்தியில் தவறான மற்றும் அவமரியாதையான நடத்தைகள் தவிர்க்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டுமென பாடசாலை சபைகளிடம் எதிர்பார்க்கிறது. இந்த நடத்தைகள் வம்புத்தொல்லை(புளியிங்), பாகுபாடு மற்றும் தொல்லைப் படுத்துதலை உட்படுத்துகிறது. எமது பாடசாலைகளில் இத்தகைய நடத்தைகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை இந்தப் புதிய சட்டம் தெளிவாகக் காட்டுகிறது. இனம், பாலினம், பாலியல் மனச்சாய்வு, அங்கவீனம் அல்லது வேறு காரணிகள் எதுவாக இருந்தாலும் மாணவர்கள் அனைவர் மத்தியிலும் மதிப்பையும் புரிந்துகொள்ளுதலையும் இந்தச் சட்டம் ஊக்குவிக்கின்றது.

### வம்புத் தொல்லை செய்தல் உட்பட தகாத நடத்தையை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் பில் 13 எவ்வாறு பாடசாலைகள் மற்றும் சபைகளுக்கு உதவுகிறது?

ஏற்கெனவே பாடசாலை சபைகளும் பாடசாலைகளும் செய்தவற்றோடு பில் 13 மேற்கொண்டு செயல்படுகிறது. சபைகளிடம் இருந்து பில் 13 பின்வருவனவற்றை தேவைப்படுத்துகிறது:

- தொடரும் சிட்சை, வம்புத்தொல்லையைத் தவிர்த்தல் மற்றும் தலையிடுதல், நியாயமான மற்றும் உள்ளடக்கும் கல்வி போன்றவற்றிற்கான கொள்கைகளை நிறுவுதல்.
- மற்றவர்களுக்கு வம்புத்தொல்லை செய்யும் மாணவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குதல் பற்றி சிந்தித்தல். இது பின்வரும் காரணங்களுக்காக இடைநிறுத்தம் செய்தல் மற்றும் வெளியேற்றம் செய்தலை உட்படுத்தலாம்:
  - மாணவர் ஏற்கெனவே வம்புத்தொல்லை செய்ததற்காக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதோடு அவரது பிரசன்னம் மற்றவர்களின் பாதுகாப்பிற்கு ஏற்றுக்கொள்ள முடியாத அபாயத்தை ஏற்படுத்துகிறது, அல்லது
  - ஒருதலைச் சார்பு, பாரபட்சம் அல்லது வெறுப்பின் காரணமாக வம்புத்தொல்லை செய்யப்படுகிறது.

  இடைநிறுத்தம் செய்யப்பட்ட அல்லது வெளியேற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விச் சட்டம் ஏற்கெனவே ஆதரவைத் தேவைப்படுத்துகிறது:
  - மாணவர்கள் வெளியேற்றம் செய்யப்பட்டிருந்தால் அல்லது நீண்ட கால இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தால் (5 பாடசாலை நாட்களுக்கும் அதிகமாக), சஸ்பென்ஷன்/எக்ஸ்பல்ஷன் புரோகிராம் மூலமாக கல்வி சார்ந்த/கல்வி-சாராத ஆதரவை அவர்கள் பெறுவார்கள். ஐந்து பாடசாலை நாட்கள் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்கள் வீட்டுப்பாடவேலை திட்டமொன்றைப் பெறுவார்கள்.
- வருடாந்த அடிப்படையில், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பாடசாலை பணியாளர்களுக்கு, வம்புத்தொல்லையைத் தவிர்த்தல் மற்றும் நலமான பாடசாலை சூழலை ஊக்குவித்தலுக்கான பயிற்சியையும், தகவலையும் அளித்தல்.
- நலமான பாடசாலை சூழல் மற்றும் வம்புத்தொல்லையைத் தவிர்த்தலைப் பற்றிய குறிக்கோள்களை அவர்களின் பல்லாண்டுத் திட்டங்களில் உள்ளடக்குதல் மற்றும் இத்திட்டங்களை பொது மக்களுக்கு கிடைக்கச்செய்தல்.

### பில் 13 தலைமையாசிரியர்களின் பொறுப்பை மாற்றுகிறதா?

- பில் தலைமை ஆசிரியர்களுக்கு புதிய, குறிப்பிட்ட பொறுப்புகளைத் தருகிறது. அவர்களிடம் பின்வருவன எதிர்பார்க்கப்படுகிறது:
  - வம்புத்தொல்லை உட்பட, ஒரு மாணவரின் இடைநிறுத்தத்தில் அல்லது வெளியேற்றத்தில் விளையக்கூடிய, சபைப் பணியாளரால் தெரிவிக்கப்பட்ட எந்த ஒரு சம்பவத்தையும் விசாரணை செய்தல்.
  - ஒரு மாணவரின் நடத்தை அவரை இடைநிறுத்தம் செய்ய அல்லது வெளியேற்றப்படச் செய்வதற்கு வழிநடத்தும்போது, மற்றொரு மாணவரை தீங்குக்குள்ளாக்கிய அந்த மாணவரின் பெற்றோர்/பாதுகாவலருக்கு சம்பவத்தைப் பற்றி அறிவித்தல். அத்தோடு தங்கள் பிள்ளைக்குக் கிடைக்கப்போகும் ஆதரவைப் பற்றி கலந்து பேச பெற்றோர்களை அழைத்தல்.
  - தங்கள் பிள்ளைக்குக் கிடைக்கப்போகும் ஆதரவைப் பற்றி கலந்து பேச, சம்பவத்தால் தீங்குக்குள்ளான மாணவரின் பெற்றோர்/பாதுகாவலரை அழைத்தல். இந்தப் பெற்றோர்களுக்கு அறிவிக்கும் கடமை தலைமை ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இருக்கின்றது.
  - ஒரு மாணவரின் இடைநிறுத்தத்தில் அல்லது வெளியேற்றத்தில் விளையக்கூடிய சம்பவத்தை அறிவித்த ஆசிரியர் மற்றும் பொருந்துமானால் வேறு சபைப் பணியாளர்களுடன் தொடர்புகொள்ளுதல். சம்பவத்தைப் பற்றிய தங்கள் விசாரணையின் முடிவுகளை அவர்களிடம் தெரிவிக்கும்படி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

ISBN 978-1-4606-1147-0 (PDF) (Tamil) © ஒன்டாரியோவுக்கான குயீன்ஸ் ப்ரின்டர், 2013



Ontario

## பெற்றோர், மாணவர்கள், ஏனைய பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்களை ஈடுபடுத்த சபைகள் மற்றும் பாடசாலைகளுக்கு பில் 13 எவ்வாறு ஆதரவளிக்கிறது?

பாடசாலையினூடாக தங்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கப்பெறும் ஆதரவைப் பற்றியும் நலமான பாடசாலைச் சூழலை ஏற்படுத்த பாடசாலை எடுக்கும் முயற்சிகளைப் பற்றியும் பெற்றோர் மேலும் தெரிந்துகொள்ள இந்தச் சட்டம் உதவுகிறது.

பின்வருவனவற்றை சபைகள் செய்யவேண்டும்:

- தங்கள் பிள்ளைகள் பெறும் ஆதரவைப் பற்றிய கவலைகள் பெற்றோருக்கு இருந்தால் அவர்கள் பின்பற்ற ஒரு செயல்முறையை அமைத்தல்.
- வம்புத் தொல்லை சம்பவங்களை பாதுகாப்பான முறையில் மாணவர், பெற்றோர் மற்றும் ஏனையவர்கள் அறிக்கை செய்ய உதவும் படிமுறையை உருவாக்குதல்.
- குறைந்தது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் பாடசாலை சூழல் பற்றிய ஆய்வுகளை நடத்துதல்.
- மாணவரின் பாதுகாப்பு மற்றும் பாடசாலை சூழல் பற்றி மேலும் அறிந்துகொள்ள பெற்றோருக்கு வாய்ப்பளித்தல்.

## பில் 13 எவ்வாறு மாணவர்களை ஆதரிக்கிறது?

பில் 13 தேவைப்படுத்துபவை:

- தகாத நடத்தையில் ஈடுபட்ட அல்லது தகாத நடத்தையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை ஆதரவளிக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கும் வம்புத் தொல்லை செய்தவர்களுக்கும் சம்பவத்தைக் கண்ட சாட்சிகளுக்கும் திட்டங்களையும் தலையீட்டு நடவடிக்கைகளையும் அல்லது வேறு ஆதரவுகளையும் பாடசாலைகள் வழங்க வேண்டும்.
- வம்புத் தொல்லை சம்பவங்களை பாதுகாப்பான முறையில் அறிவிக்க தேவையான வழிகளை பாடசாலைகள் செய்யவேண்டும்.
- எல்லா மாணவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வையும் புரிந்துகொள்ளுதலையும் அதிகரிக்கும் முகமாக குழுக்களை பாடசாலைகளில் உருவாக்க, சபைகளும் பாடசாலைகளும் அனுமதிக்கவேண்டும்; இது பின்வரும் தலைப்புக்களை உள்ளடக்கும்:
  - இனத்துவேஷ எதிர்ப்பு;
  - அங்கவீனமுள்ளவர்கள்;
  - பாலியல் நியாயத்தன்மை;
  - பாலியல் மனச்சாய்வு மற்றும் பாலின அடையாளம். இந்தக் குழுக்கள் கே-ஸ்ட்ரெயிட் அலையன்ஸ்ஸ்-ஐ (GSAs) உட்படுத்தக்கூடும்.

GSA என்ற பெயரை அல்லது இந்தக் குழுக்களுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யும் வேறொரு பெயரை அவர்கள் உபயோகிப்பதை சபைகளும் தலைமையாசிரியர்களும் தடுக்க இயலாது.

தங்கள் பாடசாலைகளின் தேவைக்கேற்றவாறு வேறு வகையான குழுக்களையும் மாணவர்கள் உருவாக்கலாம்.

- மாணவர்களால் முன்னெடுக்கப்படும் குழுவின் பெயர், அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி ஏற்றுக்கொள்ளும் நலமான பாடசாலை சூழலை ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும்.

## பப்ளிக் பாடசாலைகளில் இடத்தை வாடகைக்கு எடுக்கும் அமைப்புக்களை பில் 13 எவ்வாறு பாதிக்கும்?

விளையாட்டுக் குழுக்கள் மற்றும் சமூகக் குழுக்கள் பப்ளிக் பாடசாலைகளை உபயோகிக்கும்போது, அவை மாகாணத்தின் நடத்தை சார்ந்த நெறிமுறைகளுக்கு இசைவாக நடக்கவேண்டுமென்பதை பில் 13 தேவைப்படுத்துகிறது. பல ஆண்டுகளாக இருந்துவரும் இந்த நெறிமுறைகள் பாடசாலை சமூகத்தின் எல்லா அங்கத்தவர்களும் மதிப்புடனும் கண்ணியத்துடனும் நடத்தப்படுவதை உறுதிசெய்கிறது.

## "முழுப் பள்ளி அணுகுமுறை" பாடசாலைகளில் கல்வி கற்றலை எவ்வாறு மேம்படுத்துகிறது?

நலமான அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் பாடசாலை சூழலை உருவாக்குவது "முழுப் பள்ளி அணுகுமுறையை" தேவைப்படுத்துகிறது; இது பாடசாலை முழுவதிலும் மற்றும் சமூகத்தினர் மத்தியிலும் நலமான மதிப்புமிக்க உறவுகளை அடிப்படையாகக் கொண்டது.

பாதுகாப்பான, அனைவரையும் உள்வாங்கும் மற்றும் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் பாடசாலைகள் வகுப்பறையிலும் அதற்கு அப்பாலும் மாணவர்கள் தழைத்தோங்க உதவுகிறது. பாதுகாப்பான, அனைவரையும் உள்வாங்கும் மற்றும் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் பாடசாலைகளை உருவாக்குவதில் அரசாங்கம், பாடசாலை சபைகள், பாடசாலைப் பணியாளர், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் சமூக அங்கத்தினர் உட்பட எல்லோரும் பங்களிக்க வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மாணவர்கள் கற்கவும் வளரவும் தழைத்தோங்கவும் உதவும் நலமான பாடசாலை சூழலை உருவாக்கலாம்.

## பில் 13 என்பது விரிவான நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு பாகமாகும்

நியாயத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கும் கல்வி மற்றும் பாதுகாப்பான பாடசாலை உபாயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சட்டம் கட்டியெழுப்பப்படுகிறது. இது பாரிய நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு பாகமாகும். இந்தத் திட்டம் பின்வருவனவற்றை உட்படுத்தும்:

- பாடசாலைகளில் மேலதிக மனநல பணியாளர்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் கிராமங்களிலும் தொலைதூர சமூகங்களிலும் மனநல மருத்துவர் ஒருவருடன் வீடியோ மூலம் விரிவாக்கப்பட்ட ஆலோசனைச் சேவை வழங்குதல்.
- கல்வித் திட்டம் முழுவதும் நியாயமான, அனைவரையும் உள்ளடக்கும் கல்விசார் நியமங்களையும் மற்றும் வம்புத் தொல்லையைத் தவிர்ப்பதற்கான வழிகளையும் கண்டடைதல்; ஒன்டாரியோ கல்வித் திட்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய வழிகளைக் கட்டியெழுப்புதல்.
- வம்புத் தொல்லையைத் தவிர்ப்பதில் ஒன்டாரியோ மக்கள் அனைவருக்கும் பங்குண்டு என்பதை எடுத்துக்காட்ட பொதுசன விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை நடாத்துதல்.
- வம்புத் தொல்லையைத் தவிர்த்தல் மற்றும் தலையீட்டு நடவடிக்கை உட்பட, முழுப் பள்ளி அணுகுமுறையில் கவனத்தை ஒருமுகப்படுத்தும், மூலவளங்கள் மற்றும் நடத்தைபற்றிய அறிவுரை வழங்க, அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் பாடசாலை நிபுணர் குழு ஒன்றை உருவாக்குதல்.

## மேலதிக கேள்விகள்?

ஒன்டாரியோவில் பெற்றோர்கள் பின்வருவன பற்றி இணையத்தளத்தில் கற்றுக்கொள்ளலாம்:

- www.ontario.ca/acceptingschools இல் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் பாடசாலைகளுக்கான நடவடிக்கைத் திட்டம்
- www.edu.gov.on.ca/eng/parents/safekit.html இல் பாதுகாப்பான பாடசாலைகளுக்கான உபாயங்கள்
- www.edu.gov.on.ca/eng/policyfunding/equity.html இல் நியாயமான அனைவரையும் உள்ளடக்கும் கல்வி உபாயம்
- www.edu.gov.on.ca/eng/safeschools/standards.html இல் மாகானத்தின் நடத்தைக்குரிய நெறிமுறைகள்